Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 08
திங்கட்கிழமை
04 டிசெம்பர் 2023
கார்த்திகை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"நாங்கள் எங்கட மாவீரரை நினைவேந்தினால் இவைக்கு ஏன் வயிறு எரியுதாம்?"

யாழ். மாவட்டத்தில் சடுதியாக

# இருதயச் செயலிழப்பு இளையோரிடம் அதிகரிப்பு

## ஊசி ஊடாக உயிர்கொல்லி போதை நுகர்வால் வினை

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 4**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இருதய 'வால்வில்' தொற்று ஏற்பட்டு இருதயச் செயலிழப்பால் அவதிப்படும் இளையோரில் - குறிப்பாக 17 வயது தொடக்கம் 25 வயதானவர்களின் - எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாக மருத்துவத்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரம் வாரத்துக்கு 3 பேராவது இவ்வாறு சிகிச்சைக்காகச் சேர்க்கப்படும் நிலைமை காணப்படுவதாக மருத்துவத்துறையினர் குறிப்பிடுகின்றனர்.**

11

# ரூ.8,000 கோடி கடன்!

கொழும்பு, டிசெ. 4
உயர்மட்ட வர்த்தகர்கள் 10 பேர், நாட்டின் அரச வங்கிகளிடம் கோடிக்கணக்கில் கடன் பெற்றுச் செலுத்தத் தவறியுள்ளனர்.

இரண்டு பிரதான அரச வங்கிகளுக்கு சுமார் 8 ஆயிரம் கோடி ரூபா கடனை இந்த 10 வர்த்தகர்களும் செலுத்தத் தவறியுள்ளனரென இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

# சீனி ரூ.280 க்கே விற்கவேண்டும்

கிளிநொச்சி, டிசெ. 4
சீனி 280 ரூபாவுக்கு மேற்படாத விலையில் விற்பனை செய்யவேண்டும் என கடற்றொழில் அமைச்சர் கூட்டுறவுத்திணைக்களத்தினருடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

269 ரூபாவுக்கு சீனி கிடைப்பதாகவும், ஏற்றுமதிச் செலவை, உள்ளடக்கியே விலை தீர்மானிக்க வேண்டி உள்ளதாகவும், சாதாரண கடைகளில் 320 ரூபா வரை சீனி விற்பனையாகிறது எனவும் அமைச்சரின் கவனத்துக்கு கூட்டுறவாளர்கள் கொண்டு சென்றுள்ளனர். இதன்போதே 280 ரூபாவுக்கு மேற்படாமல் சீனியை விற்பனை செய்யவேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

தைப்பொங்கலின் பின்னர் இந்தியாவின் நாகப்பட்டினதிலிருந்து சரக்குக் கப்பலும் வருவதற்கான பேச்சுகளும் இடம்பெறுகின்றன. சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகளிலும் இதனால் மாற்றம் ஏற்படும் எனவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-113)

## விசா நடைமுறை மாற்றம்!

கொழும்பு, டிசெ. 4
இலங்கைக்கான விசா நடைமுறைகளில் அடுத்தவாரம் முதல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷா இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

11

# பனிப்பாறையைப் போல யாழின் கல்வி நிலை!

## மாவட்டச் செயலர் ஆதங்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 4
கடலின் மேலே 30 சதவீதமே பனிப்பாறை தெரியும். 70 சதவீதம் நீரினுள் அமிழ்ந்திருக்கும். அதைப்போன்றே யாழ்ப்பாணத்தின் கல்வி நிலையும் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. க.பொ.த. சாதாரண தரத்தில் ஒரு சில உயர் பெறுபேறுகளை வைத்துக்கொண்டு மாவட்டம் கல்வி நிலையில் உயர்ந்துவிட்டதாக தம்பட்டம்

11

# கடலாமை இறைச்சி; அகப்பட்டனர் இருவர்

கொடிகாமம், டிசெ. 4
நாவற்குழியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை 21 கிலோ கடலாமை இறைச்சி மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கடலாமைகள் குருநகரில் பிடிபட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125-159)



# பரந்துபட்ட அரசியல்கூட்டு ஜனவரியில் வெளிப்படும்!

## சஜித் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, நவ. 4
2024ஆம்ஆண்டுதேர்தல்வரும்எனஅறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமது பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஜனவரி மாதத்தில் வெளிப்படுத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியானஐக்கியமக்கள்சக்திதிட்டமிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் 20 அரசியல் கட்சிகளும் சிவில் மற்றும் வெகுஜன அமைப்புகளும் அங்கம் வகிக்கவுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையை ஏற்கும் தரப்புகள் மாத்திரமே கூட்டணியில் இணைத்துக்கொள்ளப் படவுள்ளன என்று சஜித் மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

மாவீரர் நாள் விவகாரம்:

# ஏ – 9 வீதியை மறித்து போராட்டம்

## சிங்கள மாணவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கேற்ற மாணவர்களையும் அதற்கு அனுமதி வழங்கிய பீடாதிபதிகளையும்

11

# 15 ஆலோசகர்களுக்கு 22 லட்சம் ரூபா செலவு

விரிவு:- பக்.11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீளவும் இணைந்த மஹிந்த - பஸில்!

கொழும்பு, டிச.4

பிளவுபட்டு செயற்படுவதனால் அரசியல் ரீதியில் படுமோசமான நிலை ஏற்படும். 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேசிய ரீதியிலான இரு தேர்தல்களை வெற்றிகொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2ஆவது தேசிய சம்மேளனம் கட்சியின் அரசியல் வெற்றிப்பாதையின் முதல் கட்டம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

# இராணுவம் ஆபத்து!

கொழும்பு, டிசே.4

இலங்கை முப்படைகளிலிருந்தும் கடந்த பத்து மாதங்களில் 15 ஆயிரம் படையினர் வெளியேறியுள்ளமை நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தக் கொலையாளிகளாக பாதாள உலகத் தலைவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களையே பயன்படுத்துகின்றனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கடந்த பத்து மாதங்களில் முப்படைகளின் 140 அதிகாரிகள் உட்பட 15 ஆயிரத்து 360 பேர் பாதுகாப்பு பிரிவிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது. (எ-இ)



# பீரிஸுக்கு சந்தேகம்

கொழும்பு, டிசே.4

"நாட்டில் தற்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளனவா என்பது சந்தேகத்துக்கிடமாக உள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் நிதியமைச்சு உள்ளதால் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றுத்துறையால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதால் மக்களாணை மலினப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## கடத்தி தாக்குதல்

கொழும்பு, டிசே.4

களனி பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று விடுதிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கியுள்ளது என்று கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்தவரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# பஸில், கோத்தாவை தண்டிக்கத் தயார்



கொழும்பு, டிசே.4

பொருளாதாரக் குற்றவாளிகளை உயர்நீதிமன்றம் அடையாளப்படுத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் குடியுரிமையை இரத்து செய்யும் கீழ்த்தரமான யோசனைக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டேன். பஸில், கோத்தாபய உட்பட ஏனையோரது குடியுரிமையை நீக்கும் யோசனைக்கு இரு கைகள் அல்ல இரு கால்களையும் உயர்த்தி ஆதரவு வழங்குவேன் எனச் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ச நாட்டுக்குச் சேவையாற்றியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஓய்வூதிய முரணை தீர்க்க நடவடிக்கை

கொழும்பு, டிசே.4

ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (எ-இ)

## சாரதி கைது

கொழும்பு, டிசே.4

தலங்கம, கொப்பேகடுவ வீதியில் அக்குரகொட சந்தியில் போக்குவரத்து ஒழுங்கை மேற்கொண்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் மீது முச்சக்கர வண்டியை மோதி விபத்தை ஏற்படுத்திய சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# மாற்றுத்திறனாளர் தினம் யாழில் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், டிசே. 4


யாழ்.மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் ஏ. பெலிக்ஸ் ஜோய் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (ச)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, டிசே. 4

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் ஒரு கிலோ 145 கிராம் கஞ்சாவுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மோட்டார்சைக்கிளில் பயணித்த நபரொருவரை சோதனையிட்டபோது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ம-113)



# மலையக மலர்ச்சி பிரிட்டன் ஆதரவு!

கொழும்பு, டிசே. 4

மலையக மறுமலர்ச்சிக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பிரிட்டன் ஆதரவு வழங்கும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# பண்பாட்டு விழாவும் காண்பியக்கூடமும்

யாழ்ப்பாணம், டிசே. 4

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக எஸ்.எம்.சமன் பந்துலசேன, கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காண்பியக்கூடக்கண்காட்சி 6ஆம் திகதியும் மறுநாள் 7ஆம் திகதியும் இரு நாள்கள் கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# கிளை திறப்பு

யாழ்ப்பாணம், டிசே.4

நீண்டகாலமாகப் பூட்டப்பட்டிருந்த மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவாலி வடக்கு கிளை- இலக்கம் 9 அவ்வூர் மக்கள் விடுத்த கோரிக்கை அமைவாக முன்னர் இயங்கிய இடத்தில் கிளைக்குழு உறுப்பினர் கௌரிகாந்தனால் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சங்க பொதுச்சபை உறுப்பினர்கள், நெறியாளர் உறுப்பினர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 92 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக புதிதாக 92 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 317 புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 2 வீடுகளின் உட்கட்டுமானம் சேதமடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-27)



# வீதியில் வெள்ளம் மாணவர் சிரமம்

முல்லைத்தீவு, டிசெ. 4
வீதியில் தேங்கும் மிதமிஞ்சிய வெள்ளத்தின் காரணமாக, முல்லைத்தீவு – மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் கல்விபயிலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குச் சொந்தமான மந்துவில் கிராமத்தினுடைய வீதிகள் மீள்குடியேற்றத்தின் பின்னர் 14 ஆண்டுகளாகத் திருத்தப்படவில்லை என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக வீதி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் கேட்டபோது, புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் வெள்ளமேலாண்மை வேலைத்திட்டங்களுக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்தில் சிறப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படும் - என்றார். (ம)

## பல்கலைக்கு மாணவர் வரும்மாதம் இணைப்பு

கொழும்பு, டிசெ. 4
2022/2023 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
முதற்கட்டத்தில் 42ஆயிரத்து 145 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (ச-இ)

## முயற்சியாளருக்கு 30 பில்லியன் ரூபா

கொழும்பு, டிசெ. 4
புதிய உலகுக்கு பொருத்தமான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து முதல்முறை 30 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.
தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான மூலதனத்தை 2 வீத சலுகை வட்டியின் கீழ் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## அடுத்த ஆண்டு உள்ளூர் முட்டை

கொழும்பு, டிசெ.4
இந்த ஆண்டுடன் முட்டை இறக்குமதி நிறுத்தப்படும் என வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன் கைத்தொழில், வர்த்தகம், மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய அமைச்சுகளின் வரவு - செலவுத் தலைப்புகள் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டக் குழுவில் விவாதிக்கப்பட்டன. (எ-இ)

## கிளிநொச்சிக் குளம்; பாதுகாக்க ஆராய்வு

கிளிநொச்சி, டிசெ. 4
கிளிநொச்சி மாவட்டத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீருக்கு நீரைப் பெற்றுக்கொள்ளும் குளமான கிளிநொச்சிக் குளத்தின் நீரேந்துப் பகுதிகளைப் பாதுகாக்கும் வழிகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ச-113-214)

## வீரசிங்கம் நினைவு யாழில் நாளை

கொடிகாமம் டிசெ. 4
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 59 ஆவது நினைவு தின நிகழ்வு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் உபதலைவர் க.மகாதேவன் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ([illegible]-159)

## நல்லூரில் இன்று நாவலர் நினைவு

யாழ்ப்பாணம், டிசெ. 4
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நல்லைநகர் நாவலர் பெருமானின் நினைவு நிகழ்வு அவரது குருபூசை தினமான இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூரிலுள்ள ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும், சிறப்பு [illegible] (ச-66)

## புதினம் தெரியுமோ?

இந்தமுறை ஓ.எல். ரிசல்ட்டில '9ஏ' அள்ளிக் கொட்டியிருக்கு. முந்தியெண்டால் எங்கையாவது அருமை பெருமையாத்தான் '9ஏ' வரும். ஆனால் இப்ப ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலையும் ஒராளாவது '9ஏ' எடுக்கிறது வாடிக்கையாப் போட்டுது. அதிலையும் வேம்படியும், இந்துக்கல்லூரியும் ஏட்டிக்குப் போட்டியா 110 பேர், 74 பேர் எண்டு '9ஏ'யை எடுத்துக் குவிச்சு வைச்சிருக்கினம். "அந்தக்காலத்தில சிலபஸ் கஷ்டம். எக்ஸாம் பேப்பரும் கஷ்டம். இப்ப அதெல்லாம் ஈஸி. அதாலதான் இப்பிடி அள்ளுகொள்ளையா ரிசல்ட்டை எடுக்கினம்" எண்டு பூமர்த்தனமாச் சொல்லி '90ஸ் கிட்ஸ்' தங்கட ஆற்றாமையைத் தீர்த்துக் கொள்ளுகினம். என்னதான் இப்பத்தை பிள்ளையள் சினிமாவுக்குள்ள மூழ்கிட்டுதுகள், தடம்மாறிப் போகுதுகள் எண்டு சொன்னாலும் கூட, அதுகள் எக்ஸாம் எண்டு வரேக்க ஒரு மார்க்கமாத்தான் இருக்குதுகள். அதாலதான் மார்க்ஸையும் எக்கச்சக்கமா எடுக்கினம். அதுக்கு தனிய இப்பத்தை பிள்ளையளின்ர திறமை மட்டும் காரணமில்லை. பெற்றாரும் தான் பெருங்காரணம்.

முந்தியெண்டால் ஓ.எல். படிக்கேக்க, இல்லாட்டி ஏ.எல். படிக்கேக்க மட்டும் தான் ரியூசனுக்குப் பிள்ளையள் போறவை. ஆனால் இப்ப அப்பிடி இல்லை. நேர்சரிப் பிள்ளையள்கூட நாலைஞ்சு ரீயூசனுக்குப் போற காலம் இது. அதோட முந்தினமாதிரி பிள்ளையள் தங்கடபாட்டில நடந்தோ, சைக்கிளிலையோ பள்ளிக்கூடத்துக்கோ இப்ப போறதில்லை. ஏலுமட்டும் பிள்ளையளின்ர பாதம் நிலத்தில படாமல் பாக்கிறது இப்பத்தைப் பெற்றாரின்ர முழுநேர வேலை. பள்ளிக்கூடத்துக்கும், ரியூசனுக்கும் ஏத்தி இறக்கிறதிலையே அவையின்ர வாழ்நாளில முக்கால் வாசிக்கும் மேல் கழியுது. புறொயிலர்க் கோழியள் மாதிரி பிள்ளையளை வளர்க்கினம். ரியூசனுக்கு விட்டால் பெற்றார் வீட்டை போறேலே. ரியூசன் நடக்கிற இடத்துக்கு முன்னாலையே ஸ்கூட்டியில நிண்டு, மற்றப் பெற்றாரோட விடுப்புக் கதைக்கத் தொடங்கிடுவினம். கிட்டத்தட்ட ஒவ்வொரு கிளாஸுக்கும் நூறு நூற்றைம்பது பிள்ளையள் போகுமெண்டால், ரியூசனுக்கு முன் றோட்டில நூறுக்கும் குறையாத ஸ்கூட்டியளையும், அதில காலை ஊண்டிக்கொண்டு 'சமா' வைக்கிற பெற்றாரையும் பாக்கலாம்.

இப்பிடி ஒரு மணித்தியாலத்துக்கு மேலா றோட்டின்ர ரண்டு சைட்டிலையும் பெற்றார் குமிஞ்சு நிக்கிறதால, ரியூசன் நடக்கிற நேரம் அதால மற்ற ஆக்கள் போய்வர முடியாத அளவுக்கு கிரவுட்டா இருக்கும். அதிலையும் பொழுதுபடுகிற நேரமெண்டால் சொல்லத் தேவையில்லை. நடுறோட்டில வந்து நிண்டுகொண்டு, அந்த றோட்டையே மறிச்சுக் கொண்டு நிப்பினம். ஊர்வழியிலயாவது கொஞ்சம் போக்குவரத்து குறைவெண்டதால ஏதோ சமாளிக்கலாம்.
ஆனால் ரவுனுக்குள்ள இப்பிடி ஒவ்வொரு நாளும் றோட்டை மறிச்சா எப்பிடிச் சமாளிக்க ஏலும்? குறிப்பா நல்லூர் கோயில் பின்வீதி, நல்லூர் முன் வீதி எண்டு ரண்டு இடத்திலையும் பிள்ளையளை ஏத்திக்கொண்டு போக நிக்கிற பெற்றோரால அந்த றோட்டால சாதாரண ஆக்கள் போய்வாறது கஷ்டமாக் கிடக்கெண்டு கனபேர் புலம்புகினம். உரியவை இதுக்கு ஏதும் வழி பாப்பினமோ?

- பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சா/த பரீட்சை பெறுபேறுகள்

க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் சில நாள்களுக்கு முன்னர் வெளியாகியிருந்த நிலையில், பாடசாலைகள் ஊடாகக் கிடைத்த பரீட்சைப் பெறுபேறுகள்

**நயினாதீவு மகாவித்தியாலயம்**
வை.சஜீனா ஏ 4பி 3சி எஸ், ஆர்.கிருசிகா ஏ பி 3சி 4எஸ், பி.ரிஷிகா 2பி சி 6எஸ், எஸ்.லக்சனா ஏ பி 3சி 2எஸ், யு.காவியா ஏ 3சி 2எஸ், கெ.யதுசா ஏ 2பி 2சி 2எஸ், கெ.கபிஷன் ஏ பி சி 3எஸ், கெ.சஜிகாந்த் ஏ சி 4எஸ், கெ.அலைக்சனா பி சி 4எஸ்.

**அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்**
கு. பவித்ரா ஏ 2பி 3சி 2எஸ், பி.அபிசாளினி ஏ 2பி 4சி, சி. துளசிகா 2பி சி 4எஸ், தி. அர்சிகா 2பி 4 சி 2எஸ், த. அபிநயன் பி 2சி 3எஸ்

**யாழ்.உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்**
ஜெ.ரொஸ்ரன் 6ஏ பி 2சி, ஜெ.சாய்ராம் 4சி 4எஸ், எஸ்.மயூரிகன் 3ஏ 4பி 2சி, பி.கார்த்திக் ஏ 5பி 3சி, எஸ்.சிந்துஜன் 3சி 4எஸ், கெ.விதுர்சன் ஏ பி 5சி 2எஸ், எம். அபிநாதப் பி 2சி 5எஸ், ஜெ.ருபஸ் ஏ 2பி 3சி 3எஸ், ஏ.கிருசிகன் ஏ 4சி 4எஸ், பி.சாருகான் 3பி சி 4எஸ், எஸ்.யஸ்மினா 4ஏ 3பி 2சி, கெ.கெசாபி பி சி 6எஸ், ஜெ.சங்கவி 2ஏ பி 4சி 2எஸ், கெ.வினோயா ஏ பி 3சி 3எஸ், ஆர். நிதிகா 2ஏ 3பி 3சி எஸ்.

**சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி**
ம.அபினயா 8ஏ சி, செ.மயூரன் 7ஏ பி சி, ம.சண்மிக்கா 6ஏ 3பி, பு.தேனுஷா 6ஏ 2பி சி, கி.கேசானா 6ஏ 2பி சி, க.யஸ்மினா 5ஏ 3பி சி, வி.சஞ்சிகா 5ஏ 3பி சி, க.பபிஜன் 3ஏ 3பி 3சி, என்.சத்தியபாரதி 2ஏ 5பி 2சி, ச.நிது 2ஏ பி 5சி எஸ்.

**யாழ்.மத்திய கல்லூரி**
ஆர். திசோத்மன் 9ஏ, எஸ். ரமேஸ் 9ஏ, பி. சபேஸ் சர்மா 9ஏ, கோ. அபிலாஸ் 9ஏ, ப.ரிஷித்திரன் 9ஏ, ரா.அபிஹாஸ் 8ஏ பி, கே.யனுசன் 8ஏபி, சி.யதுபன் 7ஏ 2பி, ர.பிரதீசன் 6ஏ 2பி சி, க.சதுர்சன் 5ஏ 4பி, பா.அனுசன் 5ஏ 2பி சி எஸ், சி.கஜித் 5ஏ 2சி எஸ், க.திசன் 5ஏ பி 3சி

**விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்**
ச.சேனுஜா 8ஏ பி, து.துஷாளினி8ஏ சி, ஜ.கவிஅரசி 8ஏ சி, அ.விதுர்சன்7ஏ சி எஸ், சி.அபிஷாளினி6ஏ 3சி, ந.வாணுஜா.6ஏ 2சி எஸ், ச.விதுர்ஷனா5ஏ 4சி, சு.நிலவெளிலன்3ஏ 3பி 3சி, சு.பிரதிகான்3ஏ 2பி 2சி 2எஸ், சி.கிதுஷா 2ஏ 2பி சி 3எஸ், யோ.பாணுஜன்4பி 3சி 2எஸ், மோ.கபிஷாஏ பி 2சி எஸ், பி.ஜிவிசன்சி 6எஸ்

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**
ஏ.யதுசன் 9ஏ, வி.ஏஜ்.செரோன் 9ஏ, கெ.கலையரசன் 9ஏ, ஜெ.வி.இன்பன் செறொன் 9ஏ, ஜெ.எப்.எஸ்.கமில்ஜோல் 9ஏ, ஜே.ஏ.கிசோன் 9ஏ, எஸ்.ஜோன்ரதுர்சன் 8ஏ பி, ஆர்.எம்.சிரோசன் 8ஏ பி, கெ.அடம் கபிரியோ 8ஏ பி, எஸ்.வக்சலன் 8ஏ சி, ஏ.ஜி.சிரோன் 7ஏ 2பி, வி.வி.டிபானோ 7ஏ 2பி, எப்.எம்.அரோன்சன் 7ஏ 2பி, பி.சியானுயன் 7ஏ பி சி, எம்.எல்.மிகார்சன் 7ஏ 2சி, ஜெ.எப்.யூட் டென்சிலி 6ஏ 2பி சி, ஜோர்ஜ் டிறொன் 6ஏ 2பி சி, ஆர்.எஸ்.மினிசொன் 6ஏ 2பி சி, சி.ஜெபன்சன் 6ஏ 2பி சி, வி.பி.சி.சாகிதன் 6ஏ 2பி சி, ஆர்.ஆர்.விஷால் 5ஏ 4பி, எஸ்.லொசாந்த் 5ஏ 2பி சி எஸ், ஆர்.சதீஸ்வரன் 4ஏ 4பி சி, ஏ.ஜெனீபன் 4ஏ 4பி சி, ஆர்.சனுயன் 4ஏ 4பி சி, டி.கெ.சன்யோய் 4ஏ 4பி சி, வை.எமானுயூல் 4ஏ 3பி சி, ஜெ.வதனன் 4ஏ 2பி 2சி எஸ், கெ.நிதின்ராஜ் 4ஏ பி 4சி.

**பேசாலை புனித பற்றிமா ம.ம.வி.**
சீ.மேரி கனிசியா மிராண்டா 9ஏ, என்.நிக்சிக்கா குரூஸ் 8ஏ பி , ஏ.சன்மினி கூஞ்ஞ 8ஏ பி , ஜே.சஞ்சீவன் குலாஸ் 8ஏ பி , பி.டிவோனி வில்வராயர் 7ஏ 2பி , ஆர்.செரோனி பச்சேக் 7ஏ 2பி , என்.ரக்சிக்தா குரூஸ் 7ஏ 2பி , ஆர்.கோபிகா 7ஏ பிசி , ஜே.மிஷாலி பீரீஸ் 7ஏ பிசி , எஸ்.செனித் பாய்வா 7ஏபிசி

**வவு. வடக்கு சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்**
செ.லக்சன் 9ஏ (ரி-9,159,60,75)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.


**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டி வரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.





## கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
தெல்லிப்பழை குருநாதசுவாமி கோயிலில் கந்தபுராண படனப் பூர்த்தி உற்சவம் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது. அபிஷேகம், விசேட பூசைகளைத் தொடர்ந்து முருகப்பெருமான் வள்ளி தெய்வானையும் விநாயகப்பெருமானும் இணைந்து திருவீதியுலா வந்தார். (ச)

## நீரிழிவு விழிப்பூட்டலும் உணவுக் கண்காட்சியும்



யாழ்ப்பாணம், டிசெ. 4
உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கைதடி யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகினரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விழிப்பூட்டல் கருத்தரங்கும் பாரம்பரியக் கண்காட்சியும் நடத்தப்பட்டது.
நிகழ்வை சித்த மருத்துவத் தலைவர் மருத்துவர் சத்தியசீலன் விவிலியன், யாழ்.நீரிழிவுக்கழகத் தலைவர் தி.மைக்கல் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (ச)

## தலைமைத்துவப் பயிற்சி

முல்லைத்தீவு, டிசெ. 4
முல்லைத்தீவு இந்து சமய அறநெறிப் பாடலை ஆசிரியர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (ச-75)

## போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் கற்கை நெறிகளுக்குப் போதனாசிரியர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சமையலாளர், கணினி பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளிசீராக்கி தொழிநுட்பவியலாளர், அலுமினியம் பொருத்துநர், கணினி படவரைஞர், கட்டட நிர்மாணவியலாளர் ஆகிய பாடநெறிகளுக்கே போதனாசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
தகைமையுடையோர் தங்கள் சுயவிவரக்கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# சிறார்களைக் காக்க ஒரு கட்டமைப்பு

சிறுவர்களின் திறமையையும் அவர்களின் திறன்களையும் வளர்த்தெடுக்கும் விதமாகவும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் சமூகப் புலனாய்வுப் பிரிவொன்று அமைக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் அரச மட்டத்தில் முன்னெடுக்கப் பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை உள்ளடக்கி இந்தச் செயற்றிட்டத்தைப் பலப்படுத்துவதற்காக அமைச்சரவையின் ஒப்புதலும் பெறப்பட்டிருக்கின்றது. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்களும், சிறுவர்கள் மீதான துர்நடத்தைகளும் நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில், இவ்வாறானதொரு திட்டம் காலத்தின் தேவையாகவும் - மிக அவசியமானதாகவும் - தவிர்க்கப்பட முடியாததாகவும் அமைகின்றது. ஆனால், இந்தக் கட்டமைப்பின் ஊடாக எவ்வாறான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்ற தெளிதலை - திட்டத்தை இப்போதே வரையறுத்துக் கொள்வது சாலச்சிறந்தது.

பாடசாலைச் சிறார்கள் மீதான பாலியல் சீண்டல்கள், அத்துமீறல்கள் என்பன சர்வசாதாரணமாக நடைபெறும் விடயங்களாக இன்று மாறிவிட்டன. குடும்பம், பாடசாலை, சமூகம் என்று சிறார்களுக்குப் பாதுகாப்பான சூழல் என்று எதையும் வரையறுத்துக்கூற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். பாலியல் துஷ்பிரயோகம் என்ற கொடுமையை நாம் ஒரு செய்தியாகக் கடந்துவிடுவோம். ஆனால், இந்தக் கொடுமையால் பலநூறு சிறார்கள் தம் வாழ்வை - உள அமைதியை - எதிர்காலத்தை இழந்து தவித்துக்கொண்டிருக்கின்றனர். அல்லாமலும், வடக்கு மாகாணத்திலும் தேசிய ரீதியிலும் போதைப்பொருள்கள் இன்று பாடசாலைக் கட்டமைப்பில் மிகச் சாதாரணமாக ஊடுருவியுள்ளன. போதைப்பொருள் விற்பனை முகவர்களின் மிக இலகுவான இலக்காக பாடசாலைகளும் மேலதிக வகுப்புகளுமே அமைந் துள்ளன. பதின்ம வயதுச் சிறார்களை இலக்காகக் கொண்டு போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட பலநூறுபேர் பாடசாலைகளுக்கு அருகில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் சிறுவர் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்படும் இந்தப் புலனாய்வுப் பிரிவானது, சிறுவர்களின் நடத்தைகள் மற்றும் அவர்களின் இதர விதானச் செயற்பாடுகள் தொடர்பில் தீவிர கவனத்துடன் செயற்பட வேண்டும். அதேநேரம், சிறுவர்களை மாத்திரம் மையப்படுத்தியதாக இந்தக் குழுவின் செயற்பாடுகள் மட்டுப் படுத்தப்படல் ஆகாது. மாறாக சிறுவர்களை பாடசாலைகளுக்கு அருகிலும், சமூகத்திலும் அணுகுபவர்கள் தொடர்பிலும் அதீத கவனம் செலுத்த வேண்டும். அதுவே சிறுவர்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான ஆத்ம நடவடிக்கையாக அமையும்.

ஒரு கை தட்டினால் ஓசை வராது. அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள சிறுவர் பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகளும் அத்தகையனவே. இந்தப் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகள் என்பன வெற்றிபெற வேண்டுமாயின், அவர்களுக்கு முழுப்பலமாகப் பொலிஸார் செயற்பட வேண்டும். ஏனெனில் புலனாய்வுப் பிரிவில் இடம்பெறப்போவது ஆசிரியர்களும் அதிபர்களுமே. போதைப்பொருள் மாபியாக்கள் அண்மைக்காலமாக ஆயுத கலாசாரத்துக்குள் சென்றுகொண்டிருக்கும் பின்னணியில், பொலிஸார் வழங்கும் ஆதரவும் பாதுகாப்பும்தான் இந்தப் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்துவதுடன் வினைத்திறனாகச் செயற்படவும் வைக்கும்.





# இலங்கைக்கு இந்தமாதம் வரவுள்ள 780 மில். டொலர்

## நிதி அமைச்சு நம்பிக்கை

**கொழும்பு, டிசெ.4**

**சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர் இரு வாரங்களுக்குள் இலங்கைக்குக் கிடைக்கும். உலக வங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலரும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலரும் இந்த மாதம் கிடைக்கும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்தது.**

கடன் மீள் செலுத்துவதற்கான நிவாரண காலத்தை இலங்கைக்கு வழங்கியுள்ள சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் கடனுக்கான வட்டி தொகையில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் இணங்கியுள்ளனர் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)



## மீள்சுழற்சி செய்யப்படாத பிளாஸ்ரிக்

கொழும்பு, டிசெ.4

இலங்கையில் தினமும் 938 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றபோதும், அவற்றில் 4 சதவீதமே மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்ரிக் தொகையில் 32 சதவீதம் மட்டுமே மீளச் சேகரிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## கைது

போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெண் என்றும் மற்றையவர் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த 26 வயதுடையவர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-இ)

## வருமானம் அதிகரிப்பு

மதுபானப் போத்தல்களில் ஒட்டப்பட்டுள்ள போலி ஸ்ரிக்கர்களைச் சரிபார்த்து நடவடிக்கை எடுத்ததன் மூலம் மதுவரித் திணைக்களத்தின் மாதாந்த வருமானம் ஒரு பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நுண்கடன் திட்டத்தை கண்காணிக்க சட்டம்

கொழும்பு, டிசெ.4

நுண்கடன் திட்டத்தின் கொடுமைகளுக்குள் தற்போது ஆதிவாசி சமூகத்தினரும் அகப்பட்டுள்ளார்கள். மத்திய வங்கியால் மாத்திரமே இந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நுண்கடன் திட்டங்களை கண்காணிக்கும் வகையில் அதிகார சபைக்கான சட்டவரைவு இன்னும் ஓரிரு மாதங்களில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ-இ)

## கர்தினாலுக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.4

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசியலாக்குகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிலையான நீதி கிடைக்கவேண்டுமாயின் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடமளிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நாளை

05.12.2023

**செவ்வாய்க்கிழமை**

கார்த்திகை 19

சுபநேரம் : 10.46 - 12.16


ராகுகாலம் : 03.16 - 04.46

## நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் வெற்றியாளராக இருக்க அழகான முகமோ, வலிமையான உடலோ தேவையில்லை; மாறாக திறமைமிக்க மனமும், செயற்படும் திறனும்தான் தேவை**

– ரோவன் அற்கின்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்நாடு - தலைமன்னார் தரைவழி சாத்தியம் ஆய்வு

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

**தலைமன்னார் மற்றும் தமிழ்நாட்டின் தனுஷ்கோடி இடையே தரைவழிப் பாலம் கட்டுவது தொடர்பான ஆய்வு நடைபெற்று வருகின்றது என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

வடக்குக்கு வந்திருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர், தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய போதே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்தியா இடையேயான எரிபொருள் குழாய்த் திட்டம் விரைவில் செயற்பாட்டுக்கு வரஇருக்கிறது.

இலங்கையின் வடக்குப் பகுதி வழியாக திருகோணமலை யைச் சென்றடையும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

தலைமன்னாருக்கும் தமிழ்நாட்டின் தனுஷ்கோடிக்கும் இடையே தரைவழிப்பாலம் அமைப்பதற்கான திட்டத்தைக் கைவிடவில்லை. இந்தத் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## கலைவிழா

யாழ்ப்பாணம் டிசெ. 4

நெடுந்தீவு கல்விக்கோட்ட முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா தேவா கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி வசந்த சகாயராணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி டானியல் நிஷாந்தினி கலந்து கொண்டார். (ரி-9)

## மன்னாரைச் சேர்ந்த எழுவர் தமிழ்நாட்டில் தஞ்சம்

கொழும்பு, டிசெ.4

மன்னாரைச் சேர்ந்த இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

மன்னார் சாந்திபுரம் பகுதியில் வசித்த இரு குடும்பங்களைச்சேர்ந்த 7 பேரே தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த இரு குடும்பங்களும் தலா ஒரு இலட்சம் ரூபாவை படகுக் கட்டணமாகச் செலுத்தி தனுஷ்கோடி பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

ராமேஸ்வரம் மரைன் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைக்குப் பின்னர் ஏழு பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)

## யாழுக்கு உலருணவுப் பொதி இந்தியத்தூதுவர் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ்ப்பாணத்தில் பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே உலருணவுப் பொதிகளை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினார். யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 480 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)



## நுழைவாயில் திறப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.4

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தெற்குப் பக்க நுழைவாயில் திறப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர மாணவர் அணியினரின் நிதிப் பங்களிப்பில் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டது.

முன்னாள் அதிபர் பி.கமலநாதன் பிரதம விருந்தினராகப் பங்கேற்று நுழைவாயிலைத் திறந்து வைத்தார். (ச-66)

## ஆண்டு இறுதிக்குள் 1.5 மில். சுற்றுலாவிகள்

கொழும்பு, டிசெ.4

2023ஆம் ஆண்டின் இறுதிக்குள் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்திசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுற்றுலா அபிவிருத்திச்சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

நவம்பர் மாத இறுதிவரை மொத்தம் 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இதன் மூலம் டிசெம்பர் மாத இறுதிக்குள் 1.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் என்ற இலக்கை அடைய முடியும். சுற்றுலாப் பயணிகளின் வருகையால், 2023ஆம் ஆண்டின் நவம்பர் இறுதிவரை 1.75 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)



## சர்வதேச மனக்கணிதப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 4

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேசமனக்கணிதப்போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 59 மாணவர்கள் பங்கேற்றுள்ள னர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 19 மாணவர்கள் பங்கேற்றனர். போட்டியில் 80க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-20-26)

# ஒரு தாய் பிள்ளைகளாக இந்தியாவுடனான உறவு

## காதர் மஸ்தான் பெருமிதம்



மன்னார், டிசெ. 4

எம்மைக் கடல் பிரித்திருந்தாலும் நாம் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற நோக்கில் தொடர்ந்து இந்தியாவுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம். பொருளாதாரத்தில் சிக்குண்டபோது இந்திய அரசு நீட்டிய உதவிக்கரம் மறக்கமுடியாதது.

- இவ்வாறு மன்னார் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இந்திய அரசின் உதவியுடன் ஆயிரம் மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்திய அரசால் எமது மாவட்டத்துக்குப் பல உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை கல்வி சார்ந்த மற்றும் சுகாதாரம் சார்ந்த விடயங்களுக்கு பெரும் பங்களிக்கின்றன. நாம் பொருளாதாரத்தில் இருந்து மீட்சி பெற எமக்கு வழி சமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளையர் கைது

கொழும்பு, டிசெ.4

கூரிய ஆயுதங்களால் மக்களைத் தாக்கி தொடர் வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடு பட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று களுத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-இ)

# வங்கிகளின் பங்குகளை விற்பதற்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.4

**நாட்டின் பொருளாதார சக்தியாக விளங்கும் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் 20 வீதப் பங்குகளை தனியாருக்கு விற்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் குற்றம்சுமத்தியுள்ளது.**

இந்தத் திட்டம் ஒரு மூலோபாய முதலீடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும், இந்த வருட வரவு - செலவுத் திட்ட முன்மொழிவிலும் இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் கூறுகிறது. அரச வங்கிகளை விற்பனை செய்தல், கூட்டு ஒப்பந்தங்களைத் தடை செய்தல், நியாயமற்ற வரி விதிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க தெரிவித்தார். (ஏ-இ)

## பிரேரணை நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ.4

நடாளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, சுஜித் மற்றும் ரோஹன ஆகியோருக்கு நாடாளுமன்ற அமர்வுகளுக்குத் தடை விதிக்கும் பிரேரணை 56 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பிரேரணைக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் கிடைக்கப்பெற்றன. 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்தனர். (ஏ-இ)

வீடு வாடகைக்கு

1/5 மடம் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

மாதவாடகை - 30000/-

071 224 0149

## பொது மக்களுக்கான அறிவித்தல்



இன்வென்டிவ் ஆட்டோமொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் சேவைப் பிரிவில் யாழ்ப்பாணம் வெள்ளந்தெருவில் 9/3 இல் வசிக்கும் திரு. சிங்கராசா கபில்ராஜ் (NIC.No. 882774511V) நிறுவனத்தில் பணிபுரியவில்லை என்பதை பொது மக்களுக்கும் எங்கள் பங்குதாரர்களுக்கும் தெரிவிக்கவே இது திரு. கபில்ராஜ் உடனான எந்தவொரு பரிவர்த்தனைக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது. (cr.41128)

## புதிய சுகாதார நிலையம் அரியாலையில் திறப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ்.மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட அரியாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. 13.8 மில்லியன் நிதியில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிலையம் அமைத்துக்கொடுக்கப்பட்டது. (ச-66)



## வலிகாமம் தெற்கு பிரதேசசபை 2024 ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைவு) பொதுமக்கள் பார்வைக்கு

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 04.12.2023 திகதி தொடக்கம் 08.12.2023 ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. **இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்களிலும் பொது நூலகங்களிலும் மற்றும் அலுவலகத்தின் வலிகாமம் தெற்கு பிரதேசசபை முகநூல்** பக்கத்திலும் பார்வையிடலாம் என்பதனை தயவுடன் அறியத்தருகிறேன்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(cr41287) (N.1)

## விழிப்புணர்வுச் செயற்பாடு

கிளிநொச்சி, டிசெ.4



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், பெண்கள் வன்முறைக்கெதிரான வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு 16 நாள் செயல்வாதத்தின் நடவடிக்கைகள் கிளிநொச்சி உளநல சங்கம், கிளிநொச்சி மகாசக்தி சம்மேளனம் ஆகியவற்றின் நிதி அனுசரணையில் பெரியபரந்தன் கிராமசேவகர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வு "பெண்கள் வன்முறைக்கெதிராக ஒன்றிணைந்து செயற்படுவோம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது. (ரி- 113-75)

## மரண அறிவித்தல்

தோற்றம்
03
04
1942



மறைவு
02
11
2023

### செல்லம்மா பாலசுப்பிரமணியம்

கரவெட்டி கிழக்கு யார்க்கருவை பிறப்பிடமாகவும் வரணி மற்றும் கீரிப்பல்லி கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (02.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், இராகவன் (அவுஸ்ரேலியா), இராமச்சந்திரன் (பிரித்தானியா), பாலநந்தினி, பாலச்சந்திரன், பாலராஜன் (பிரித்தானியா), பாலநந்தன் (பிரித்தானியா), பாலஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சிதமலர் (அவுஸ்ரேலியா), ரஞ்சினி (பிரித்தானியா), குணசீலன், பரமேஸ்வரி, ஜெயபாலினி (பிரித்தானியா), பாமினி (பிரித்தானியா), அருட்செல்வம் (அருண் ரெக்ஸ் - நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌசிகன், அனங்கன் (அவுஸ்ரேலியா), ஜெரோம், ஜெசிக்கா, ஜோவான் (பிரித்தானியா), உசாந்தன், சங்கீத், சஞ்சீ, அஜய், பவேஷ் (பிரித்தானியா), துஷானா, ஹரிஸ் (பிரித்தானியா), அக்ஷயா, அஸ்விதன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2023) செவ்வாய்க்கிழமை கீரிப்பல்லி கரணவாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கீரிப்பல்லி,**
**கரணவாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 662 7944, 077 714 9459**

(cr 41129) (CS) N-1



## தோல் பை பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 4

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் தோல்பை செய்யும் பயிற்சிநெறி கடந்த புதன்கிழமை சண்டிலிப்பாய் விதாதா வள நிலையத்தில் நடத்தப்பட்டது.

பிரதேசத்தில் சிறுதொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் மற்றும் சுய தொழிலை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்காகக்கொண்டு இந்தப் பயிற்சிநெறி இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் கைது

யாழ்., டிசெ.4 யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு ஒரு கிலோ 480 கிராம் கஞ்சாவுடன் கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-23)


# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில்
மணிவிழாக் காணும் எங்கள் ஆசிரியர்

## திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி - S.L.T.S-1

(பயிற்றப்பட்ட - மனைப்பொருளியல் ஆசிரியர்)

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி இன்று (04.12.2023) திங்கட்கிழமை அன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**

- வ / பாலமோட்டை அ.த.க. பாடசாலை - 06.08.1988 - 31.12.1989
- பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை - 01.01.1990 - 31.12.1991
- வ / ஓமந்தை மகாவித்தியாலயம் - 01.01.1992 - 02.03.1999
- வ / புலேயன்குளம் இந்துக் கல்லூரி - 03.03.1999 - 18.10.2000
- வ / கொல்லர் புலேயன்குளம் ஸ்ரீராமகிருஸ்ணா வித்தியாலயம் - 19.10.2000 - 05.06.2002
- யா / மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் - 06.06.2002 - 04.08.2010
- யா / கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி - 05.08.2010 - 04.12.2023

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிச் கழகம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

(cs.27269) N.1)

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

01. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2023/2024 ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

| விடயம் | குறியீட்டு இலக்கம் | வாகனங்களின் எண்ணிக்கை | சேவைக் காலம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|---|
| வாகன சுத்திகரிப்பு சேவை | NP/KOC/RDHS/42/2/VS/2023/24 | 27. | ஒரு வருடம் | 2,500.00 | 50,000.00 | 18.02.2024 |

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் (NCB)மூலம் நடாத்தப்படும்.
03. விலைக் கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபார பதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல. 0212285932 / 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
06. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.12.2023ம் திகதி முதல் 18.12.2023ம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்விகள் 18.12.2023ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் குறியீட்டு இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
08. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
09. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று கிளிநொச்சி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 11 ம் திகதி டிசெம்பர் 2023 முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.
10. 01/11/2023 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
12. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**

(எ.41123) N.1

# 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சிதம்பரப்பிள்ளை செல்வரெட்ணம்**
திதி: சப்தமி



அன்னை மடியில் 11 . 11 . 1949
ஆண்டவன் அடியில் 17 . 11 . 2000

எங்கள் அப்பா எம்மை விட்டு நீங்கி
நீண்டது இருபத்திமூன்று ஆண்டுகள்
எங்கள் நினைவில் வாழ்கிறீர்கள்
நினையும் எம் வாழ்நாள் வரை....

20 A ஈச்சமோட்டை
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மச்சான்மார்.

(cs.53032) (N.1)

# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02.01.1941
விண்ணில் 05.12.2012

## அமரர் சின்னப்பா குணரத்தினம்

(ஓய்வுநிலை உப தபால் அதிபர் – கனகராயன்குளம்)
திதி : அபரபக்க ஸப்தமி (04.12.2023)

புன்முறுவல் பூத்த உங்கள் வதனத்தை நாம் கண்டு
இன்று பதினொரு ஆண்டுகள் ஆகி விட்டதேயப்பா!
- உங்கள்

ஒவ்வொரு நல் வார்த்தைகளும்
இவ்வுலகில் நாம் மனிதராய் வாழ வழிகாட்டுமப்பா......

இல:695/2,
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்
(ஸ்ரேசன் றோட், பளை)

(CR41298 ) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 07 . 1936



மறைவு 02 . 12 . 2023

## முருகேசு சுப்பிரமணியம் (கராஜ்-வைரமுத்து)

(அம்பிகை மோட்டோர் வேர்க்ஸ் உரிமையாளர்)

நவிண்டில் சக்கலாவத்தை கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிரி கோட்டைத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (02.12.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமு தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் காலஞ்சென்றவரான பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, யசோதாம்பிகை (ஜேர்மனி), சுபாம்பிகை, யோகாம்பிகை (டென்மார்க்), சிவராமன் (ஜேர்மனி), செந்தில்வேல் (அவுஸ்ரேலியா), ஜனாதனா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (கந்தவனம்), கந்தையா (சதாசிவம்), செல்லம்மா, திருநாவுக்கரசு (கதிரவேல்) ஆகியோரின் இளைய சகோதரரும், தங்கம்மா, வள்ளிப்பிள்ளை, பொன்னையா, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயபாலு (உரிமையாளர், ஜெயா ரெக்ஸ் நெல்லியடி), கீர்த்தன் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (டென்மார்க்), மணிமேகலை (ஜேர்மனி), சசிந்தினி (அவுஸ்ரேலியா), தணிகைவேள் (ஆசிரியர் யா/நெல்லியடி மத்திய கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், பாரத் அஞ்சனா, உமைசுதன் பர்ஷா, கிருஷாயினி (அமரர்), டல்ஷிகா, நிகாஷன், சாரங்கா, ஜோதிகா, தேனுகா, அருண், லக்சனா, பிரவின், டீபிகா, சமுத்திரா, துர்க்கா, பைரவி, தேஷ்னா ரோஹித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**077 1240 087, 077 988 2160 தகவல்:குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகோதரர்களின் இசை நிகழ்ச்சி

இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல சகோதரிகளான சரோஜா, சுஜாத்தா ஆகியோரின் இசை நிகழ்ச்சி கொழும்பு சுவாமி விவேகானந்தர் கலாசார மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக வயலின் - வாசுகி சுவாமிநாதன் சர்மா, மிருதங்கம் - பிரம்மஸ்ரீ எ.ஜி.எஸ். சுவாமிநாதன் சர்மா மற்றும் கஞ்சீரா - எஸ். அரவிந்தன் சர்மா ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி)



## மரக்கன்றுகள் மலிவு விற்பனை

கார்த்திகை மாத மரநடுகை மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முயற்சியாண்மைக் கழகத்தின் ஏற்பாட்டில் பயன்தரு மரக்கன்றுகளின் மாபெரும் மலிவு விற்பனை கடந்த புதன்கிழமை கல்லூரியில் நடைபெற்றது. (ரி-66)

## பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ. 4

சாவகச்சேரி பிரதேசசபை நாவற்குழி பொதுநூலகத்தில் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு நாவற்குழி கந்தையா கனகம்மா நினைவு மண்டபத்தில் சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் பிரதம விருந்தினராகவும், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.செல்வராணி ஜெகதீசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்வுகளும், பரிசளிப்பும் மற்றும் கதிர் சஞ்சிகை வெளியீடு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன. (ரி-66)





## சான்றிதழ் வழங்கலும் விற்பனை நிகழ்வும்

கிளிநொச்சி, டிசெ. 4

ஜெயந்திநகர் பற்றிக் பயிற்சி நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், விற்பனை நிகழ்வும் கரைச்சி பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பி.ஜெயகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர், மாகாண தொழிற்றுறை திணைக்களப் பணிப்பாளர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியில் முதன் முதலாக குறித்த பயிற்சிநெறி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-27)

## முத்தமிழ் விழா

அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியின் இந்த ஆண்டுக்கான முத்தமிழ் விழா கடந்த புதன்கிழமை கல்லூரி முதல்வர் அருட் சகோதரி, அருள்மரியா தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

தமிழர் பண்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆடல் பாடல், கோலாட்டம் மற்றும் இசை, பரதநாட்டியம் போன்ற மேள தாளங்களுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. பூபாலசிங்கம் பங்கேற்றார். (ச-23)





வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை மற்றும் கணேசபுரம் அபிராமி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலய மாணவர்கள் இணைந்து 'சேவ் த பிளனெட்' எனும் தொனிப்பொருளில் பேருந்து தரிப்பிடத்தில் சுவர் ஓவியங்களை கடந்த சனிக்கிழமை வரைந்தனர். (ரி-75)



தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் வவுனியா இறம்பைக்குள மகளிர் வித்தியாலய மாணவிகள் கி.அரோனிகா றேஷல் கவிதை ஒப்புவித்தல் போட்டியிலும், கோ.ஜெனீபர் அஞ்ஞலிகா எழுத்தாக்கப் போட்டியிலும் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளனர். (ரி-75)



மடு பிரதேச செயலகத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் சின்னவலயன்கட்டு அ.த.க. பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கோலாகலமாக இடம்பெற்றது. இதில் மாணவர்களின் விநோத விளையாட்டுகள் மற்றும் கலை நிகழ்வுகள் சிறப்புற்றன. (ச-75)



எழுதுமட்டுவாழ் தெற்கு கணேசா கல்வி நிலைய ஆசிரியர் தின நிகழ்வும், மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வும் அண்மையில் கல்வி நிலைய இயக்குநர் த.யுக தீபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன் கலந்து கொண்டார். (ரி-9)

இலங்கை தேசியப் பாடசாலைகளுக்கிடையிலான வில்லிசைப் போட்டியில் அல்லாரை அ.த.க. பாடசாலை முதலிடம் பெற்றது. (ரி-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

சுன்னாகம் முத்துக்கிருஸ்ணர் ஒழுங்கையைச் சேர்ந்த தர்மலிங்கம் நந்தகுமாரன் ஆகிய நான் புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள அம்பலசிட்டி என எனது உறுதியிலும், தங்கப்பிள்ளை விக்னராசாவினால் அம்பனையிட்டி என அழைக்கப்படுவதுமான J/207 புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்டதுமான ஆதனத்தில் எனக்கு 2 பரப்பும் 3 குழியும், மேலும் சின்னத்துரை அருந்தவராசாவிற்கும் பெண் ரஞ்சித மலருக்கும் 4 பரப்பும் 5 குழியும் சொந்தமானது என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன். குறித்த ஆதனத்தை அதற்கு உரிமை இல்லாதவர்கள் மோசடியாக விற்க முயற்சிப்பதனால் இவ் அறிவித்தல் விடுக்கப்படுகிறது. இவ் ஆதனம் தொடர்பில் காணி /1226/23 எனும் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதையும் அறியத்தருகிறேன்.

-த.நந்தகுமாரன்

(CS 272751 S-1

# மரண அறிவித்தல்

## மாலதி சிவாஸ்கரன்

(வாசன்)

தோற்றம்:06.07.1962 மறைவு:03.12.2023



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், காளிகோவிலடி நல்லைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட மாலதி சிவாஸ்கரன் அவர்கள் நேற்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமாஸ்கந்தன் பொன்மணி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினம் அன்னலட்சுமி, சித்திவிநாயகம் பகவதி அம்மா ஆகியோரின் மருமகளும், நவரத்தினம் சிவாஸ்கரன் (வாசன்) அவர்களின் அன்பு மனைவியும், மதுஷனா (அவுஸ்திரேலியா), மீரஜா, டிலானி, நிலக்ஷன், நிரோஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அஜந்தன் (அவுஸ்திரேலியா), விதுஷன் ஆகியோரின் மாமியாரும், கௌரி, வசந்தி, செல்வதி, நவநீதன் (அப்பு), சிறீதரன், யசோதரன் ஆகியோரின் சகோதரியும், ரதிபாஸ்கரன், ஜெயபாஸ்கரன், கர்ணபாஸ்கரன், நகுலபாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும், ஜெயமணி, சசிகலா, லிங்கேஸ்வரி, சந்திரிகா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பொ.சுலோசனிங்கம் (அம்மையா) அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 472 5877

(CS 272770 S-1

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் லலிதா

தோற்றம்:08.01.1951 மறைவு:03.12.2023



நெல்லியளையைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் லலிதா அவர்கள் நேற்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவானந்தம் பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னப்பு குழந்தையம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், கிரிஜா, ரவீந்திரன், சுகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசய்யா, விஜிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுங்கரன், சுஜித்தா (லண்டன்), சுஜீன், தர்சிகா, ரிஷாந், கிருபிகா (பிரான்ஸ்), விதுமன், பவிபுதன், கிரிவிந்தியன் ஆகியோரின் அன்பு மாமியும், சன்விகா, தருணிகா, சாம்பவி, நகினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 272754 S-1



# நூற்றாண்டு ஒளிவிழா


யாழ்ப்பாணம், டிசெ. 4

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு கால ஒளி விழா நிகழ்வு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் க.ஜே.பிரட்லி சிறப்பு விருந்தினராகவும், கோப்பாய் பங்குத் தந்தை எம்.எல்.மொன்பேட் அடிகளார், மறைக்கல்வி நடுவு நிலைய இயக்குநர் அருட்பணி டபிள்யூ.ஜேம்ஸ் அடிகளார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ரி-66)

# கர்ப்பிணிகளுக்கு உலருணவுப் பொதி

வவுனியா, டிசெ.4



வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் ஆசிகுள வட்டாரத்துக்குட்பட்ட கர்ப்பிணித்தாய்மாருக்கு உலருணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன. (ச-75)



# தேசிய மட்டப் போட்டியில் மெமோறியல் முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

இலங்கை தேசிய கர்நாடக சங்கீதப் போட்டியில் இசை நாடகப்பாடல் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். (ரி)

# மரண அறிவித்தல்

## அருணாசலம் நடராசா

(ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்)



சுண்டுக்குளி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல 13, பலகைபிரத நிலைய வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் நடராசா அவர்கள் (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மாவின் மருமகனும், சரோஜினி தேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற உதயகுமார், விமலகுமார் (ஆசிரியர், யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தினியின் (ஆசிரியை, யா/ டிறிபேக் கல்லூரி) பாசமிகு மாமனாரும், பவிஷா, பவிஷாலினியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 13, பலகைபிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 226 9934

(CR 41131) S 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் அநீதி மக்கள் போராட்டம்

'தடுப்புக் காவல் படுகொலையை நிறுத்து' எனும் தொனிப் பொருளில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.
'வேலியே பயிரை மேய்கின்றதா', 'பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய் ', 'அப்பாவிகளை தண்டிக்காதே குற்றவாளிகளை தப்ப விடாதே' போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஏராளமானோர் ஈடுபட்டனர். (அ-ச-23-66)

# நன்னடத்தைப் பாடசாலையில் சிறுவன் அடித்துக் கொலை!

## பெண் பணியாளர் கைது

அம்பாறை, டிசெ. 4
கல்முனை இஸ்லாமபாத் பெண்கள் சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையில் கடந்தமாதம் 17ஆம் திகதி மணியைக் களவு எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிறுவன் அடி காயங்களால் உயிரிழந்துள்ளான்.
நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் அந்தக் காப்பகத்தில் சிறுவன் பாதுகாப்புக்காக தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
மட்டக்களப்பு கொக்குவிலைச் சேர்ந்த ஆனந்ததீபன் தர்சான்ந் (வயது - 15) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.
கடந்த புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் உயிரிழந்து உள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும் சிறுவனின் உடலில் காயத் தழும்புகள் இருப்பதனால் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.
இதனையடுத்து கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் வைக்கப்பட்ட சிறுவனின் சடலம் அம்பாறை பொது மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. உடலில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும் உட்காயங்களால் உயிரிழப்பு சம்பவித்துள்ளதாகவும் உடற்கூற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சிறுவனைத் தாக்கியதாக சந்தேகத்தில் 25 வயது மதிக்கத்தக்க மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார்.
சிறுவன் தங்க வைக்கப்பட்டிருந்த காப்பகத்தில் சம்பவ தினம் இரவு உணவை உட்கொண்ட பின்னர் பாடசாலை வளாகத்தில் நின்றதாகவும் பின்னர் என்ன நடந்தது எனத் தெரியவில்லை எனவும் முன்னுக்குப் பின்னான வாக்குமூலங்கள் வழங்கியதை தொடர்ந்தே சந்தேகத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-இ)

# போலி 5,000 ரூபா

கொழும்பு, டிசெ.4
போலி 5 ஆயிரம் ரூபா நோட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். இவர் மஹியங்கனையைச் சேர்ந்தவர் என்றும் அவரிடம் இருந்து 8 போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# கைது

கொழும்பு, டிசெ.4
12 வயதுடைய மகளை 2 வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், ஒருவர் கொபேகனே பொலிஸாரால் நேற்று முன்தினம் ம் கைதுசெய்யப்பட்டார்.
கைதானவர் வன்னிகம, வித்திகுளிய பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடையவர் என்றும், வவுனியா பம்பைமடு 17 ஆவது காலாட்படை முகாமில் ஊழியராகப் பணிபுரிபவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## இருதயச்...

உயிர்கொல்லி போதைப்பொருளை ஊசி மூலமாக உடலில் செலுத்துவதால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் 3 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக தான் அறிந்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் மருத்துவத்துறை வட்டாரங்களிடம் வினவியபோதே மேற்படி அதிர்ச்சித் தகவலை அவர்கள் வெளியிட்டனர்.
ஊசி மூலமாக உயிர்கொல்லி போதைப் பொருளை நுகர்வதால் இதுவரை காலமும் நுரையீரல் அழற்சி காரணமாகவே அதிகளவானோர் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு வந்தனர். தற்போது வெளிநாடு செல்வதற்காக குருதிப் பரிசோதனை செய்யும் பல இளையோருக்கு நுரையீரல் அழற்சி இருப்பது கண்டுபிடிக்கப்படுகின்றது. இவ்வாறு நுரையீரல் அழற்சி ஏற்படுபவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்கள் ஊசி மூலமாக உயிர்கொல்லி போதைப்பொருளை நுகர்ந்தமை தெரியவந்துள்ளது.
அதேநேரம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாத்திரம் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று இளையோர் இருதய வால்வில் தொற்று ஏற்பட்டு சுவாசிக்க முடியாமல் கடும் காய்ச்சலுடன் சேர்க்கப்படும் சம்பவங்களும் அதிகரித்துச் செல்கின்றன. இவர்களின் நோய்க்கான பின்னணி தொடர்பில் மருத்துவர்கள் ஆராய்ந்தபோது, உயிர்கொல்லி போதைப்பொருளை ஊசி மூலம் ஏற்றியவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.
நீண்டகாலமாக இவ்வாறு உயிர் கொல்லி போதைப் பொருளைப் பயன்படுத்தியவர்களே தற்போது மருத்துவமனைகளில் இவ்வாறு சேர்க்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## 15 ஆலோசகர்களுக்கு...

**ஜனாதிபதியின் ஆலோசகர்களாகப் பணியாற்றும் 15 பேருக்கான மாதாந்தச் செலவு 22 இலட்சம் ரூபாவை அண்மித்**துள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தால் தெரிவிக்கப்படுகின்றது.
பொருளாதார நிலைப்படுத்தல், மீட்சி மற்றும் வளர்ச்சி ஆகியன தொடர்பான ஆலோசகருக்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா, ஊடகம் மற்றும் தொடர்பாடல் ஆலோசகருக்கு 2 இலட்சத்து 13 ஆயிரம் ரூபா, விஞ்ஞான விவகார ஆலோசகருக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா மாதாந்தம் வழங்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

## ஏ-9 வீதியை...

தண்டிக்க வலியுறுத்தி திடீரென முளைத்த கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற அநாமதேய அமைப்பு எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஏ-9 வீதியை வழிமறித்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதன் பின்னணியில் கிளிநொச்சி வளாகத்தில் பணியாற்றும் சிங்கள விரிவுரையாளர் ஒருவர் இருப்பதும் தற்போது தெரியவந்துள்ளது.
கடந்த 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனது பிறந்த நாளையும், அந்த அமைப்பிலிருந்து உயிர்நீத்தவர்களின் நினைவு தினத்தை கடைப்பிடித்தமையும் கிளிநொச்சி வளாகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதோடு இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என சிங்கள மாணவர்கள் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அநாமதேயமாக முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.
அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை இயங்காத - பதிவு செய்யப்படாத கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் துணைவேந்தருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
இந்தக் கடிதத்தில்;
**மாவீரர் நாள் நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்களையும் அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கியதாகக் கூறப்படும் விவசாய பீடாதிபதியையும் உரிய விசாரணைகள்** முடிவுறும் வரையும் இடைநிறுத்தி வைக்கவேண்டும். இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் இத்தகைய நிகழ்வுகளைக் கண்டும் காணாமல் இருந்த பொறியியல்பீட பீடாதிபதி, தொழில்நுட்ப பீட பீடாதிபதி ஆகியோரும் பதவி விலகவேண்டும் . மேலும் சில விடயங்களை முன்வைத்தும் எதிர்வரும் 7ஆம் திகதி ஏ -9 வீதியை குறுக்கறுத்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். 5ஆம் திகதிக்குள் நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்களையும், விவசாய பீடாதிபதியையும் உள்நுழைவுத் தடை மூலம் இடைநிறுத்தி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். நாளை மறுதினம் 6ஆம் திகதிக்குள் எமக்குச் சாதகமான பதில் வழங்காது விடின் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் நீதிமன்றக் கட்டளையைப்பெற்று ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டு 7ஆம் திகதி திட்டமிட்டபடி போராட்டத்தை முன்னெடுப்போம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இதேநேரம், மாவீரர் நாள் நிகழ்வுகள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் தாம் கலந்துரையாடி இருப்பதாகவும் தமக்கு உரிய சட்ட ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் வழக்குகளில் முன்னிலையாகுவதற்கு சட்டத்தரணிகள் சம்மதித்திருப்பதாகவும், இலங்கையின் ஏனைய நகரங்களில் இது தொடர்பில் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது குறித்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்துடன் கலந்துரையாடப்பட்டிருப்பதாகவும் இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## விசா...

உல்லாசப்பயணிகள், இணைய வழி வர்த்தகர்கள் யாவருக்கும் முதலீட்டு விசாவின் கீழ் அனுமதி வழங்கப்படவுள்ளது. இலங்கையில் கல்வி பயிலும் **வெளிநாட்டு மாணவர்கள் 200 டொலரை ஒரே தடவையில் செலுத்தினால் அவர்க**ளது விசா வருடாந்தம் கட்டணமின்றிப் புதுப்பிக்கப்படும்.
கொழும்புத் துறைமுக நகரத்தில் பணிபுரிவோரின் கணவன் அல்லது மனைவி என்போருக்கும் முதலீட்டு விசாவின் கீழ் அனுமதி வழங்கப்படவுள்ளது. (அ-ஒ-6)

## பனிப்பாறையைப்...

அடிக்க முடியாது என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.
திருமறைக்கலாமன்ற தினம் கலைத்தூது மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாம் கல்வியில் சிறந்த நிலையை அடைந்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. அறிவு, திறன், மனப்பாங்கு மூன்றும் சேர்ந்திருக்கவேண்டும். நாம் அறிவில் மாத்திரம் உயர்வடைவதால் எமது சமூகம் முன்னேறாது. எங்களிடம் திறன், மனப்பாங்கு இரண்டும் இல்லை. அவற்றை வளர்ப்பதற்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளே துணைபுரியும். இன்றைய பிள்ளைகள் இணைபாடவிதான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு விருப்பம் உடையவர்களாக இருந்தாலும், பெற்றோருக்கு விருப்பம் இருந்தாலும் நேரமின்மை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இதனால்தான் நான் தனியார் கல்வி நிறுவனங்களை ஆகக் குறைந்தது வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடும் முடிவை எடுத்தேன். அதற்கும் பலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனாலும் இந்த முடிவை நான் மாற்றப்போவதில்லை.
இப்போது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் பலருக்கு '9 ஏ' வந்ததாக முகநூல்களில் போடுகின்றனர். அவர்களால் போரில் பின்னடைந்த இந்தச் சமூகத்தை கட்டியெழுப்பும் திறன் இருக்கின்றதா? இல்லை. எனவே திறன் மற்றும் மனப்பாங்கு இல்லாத கல்வியால் சமூகத்தில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது - என்றார். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிதண்ணீர் பாதுகாப்பு கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிதண்ணீர் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் சுத்தமான பாதுகாப்பான நீர் வழங்கல் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ரி-113)



## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

**Viber or Whatsapp**
**0044 7578 626565, 077 251 9150**
Email add: rajasasikumar@gmail.com

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியிலுள்ள
மாட்டுப்பண்ணைக்கு நன்கு
அனுபவமுள்ள வேலையாட்கள்
தேவை. சிறிய குடும்பம்
விரும்பத்தக்கது
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**077 538 1642**

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.

திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- **ஜெயம்**

**077 814 7389,077 986 5457**



## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 08 . 1960 — மறைவு 03 . 12 . 2023

### மூத்ததம்பி கனேசலிங்கம்
(முன்னாள் காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிடெட் ஓட்டுனர்)

டச்சு வீதி, வீமன்காமம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், நாவலர் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி கணேசலிங்கம் நேற்று (03.11.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி பாக்கியம் தம்பதிகளின் இளைய புதல்வரும், காலஞ்சென்ற மருதமுத்து தனபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் இந்திராணியின் பாசமிகு கணவரும், பவித்திரா, சரவணன் (Affiniti Innovations), சயித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், அன்னலீலா, சற்குணதேவி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், கணேசலிங்கம் மற்றும் செல்வராஜா, நகுலாம்பிகை, சண்முகராஜா, நவரட்ணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2023) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**142, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 29.11.1937 — இறப்பு 01.12.2023

### கனகசுந்தரம் முருகமூர்த்தி
### (உரிமையாளர் வைர மாளிகை)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் முருகமூர்த்தி கடந்த (01.12.02023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பவானி முருகமூர்த்தி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் சிவகாமிப்பிள்ளை (இளையாச்சி) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லத்ம்பி (ஊழியன் அச்சகம்), அல்லியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயந்தினி, செந்தூரான், கனவேலழகன், குறிஞ்சிக் குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகிருஷ்ணராஜா, சங்கீதா, றோகிலா, நித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜீத், கனகவேல், வேல்குமரா, நிலா, திருவேரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தில்லைநாயகி, செல்வநாயகி, நடேசன், சுந்தராதேவி, சகுந்தலாதேவி, மயிலேறும் பெருமாள் மற்றும் தவமணி தேவி ஆகியோரின் சகோதரனும், சுரேந்திரன், தனலட்சுமி, காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் பாலேந்திரன், ஸ்ரீகுமாரி, விஜயகுமாரி, லலிதகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2023) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் (ஊரிக்காடு) நடைபெற்று தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**மு. செந்தூரான் (மகன்)**
**(077 788 8215)**

**379, KKS வீதி,**
**வல்வெட்டித்துறை.** (CS 53035) (AK-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 361 [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 04.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org